
Let's Learn in the Name of Allah Who Taught by Pen

# ஸெய்னப் செய்தி மடல்

ஸெய்னப் முஸ்லிம் மகளிர் ஆரம்பப் பாடசாலை

ZAINAB PUTTALAM

## புதிய உதயம்



கடந்த 31.01.2008 அன்று புத்தளம் செயினப் மகளிர் ஆரம்பப் பாடசாலை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இச்சிறப்பு நிகழ்வின்போது பாடசாலையின் ஸ்தாபகரும் கால்நடைகள்வள பிரதி அமைச்சருமாகிய கே.ஏ. பாயிஸ் அவர்களும் வடமேல் மாகாண முதலமைச்சர் அதுல விஜேசிங்ஹ அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். அன்றைய நிகழ்வில் கல்வி அதிகாரிகளும், பாடசாலை அதிபர்களும், நலன்விரும்பிகளும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. இச்சிறப்பு நிகழ்வு இரவு 12.00 மணி வரை நடைபெற்றது. நிகழ்ச்சிகள் அனைத்தும் விசேட வானொலி அலைவரிசையில் ஒலிபரப்பப்பட்டன.

## பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம் - செயற்குழு

08.02.2008 அன்று மாலை 4.00 மணியளவில் பு/ செய்னப் மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கான முதலாவது பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் கூட்டப்பட்டது. பு/ பாத்திமா மகளிர் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அதிபர் பெலஜியா அபுல்ஹுதா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கால்நடைகள் பிரதி அமைச்சர் ஜனாப் கே.ஏ. பாயிஸ் விசேட விருந்தினராக வருகை தந்திருந்தார். புத்தளம் செய்னப் மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கான பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் இதன்போது தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் செற்பாட்டில் பாடசாலையின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் தொடர் நிகழ்வாக 10.02.2008 ஞாயிறு அன்று முற்பகல் 10.00 மணியளவில் பு/ செய்னப் மகளிர் ஆரம்பப் பிரிவில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கான விஷேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இக்கூட்டத்திலும் கால்நடைகள்வள பிரதி அமைச்சர் கே.ஏ. பாயிஸ் கலந்து கொண்டு பாடசாலை அபிவிருத்தியை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காக பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்தார்.

அதன்படி பல்வேறு செயற்குழுக்கள் அமைக்கப்பட்டன. அவைகளாவன :

சுற்றாடல் அலங்கரிப்புக் குழு, கலாசாரக் குழு, விளையாட்டுக் குழு, பாதுகாப்புக் குழு

இக்குழுக்களுக்குரிய கடமைகள் - பொறுப்புக்கள் என்பன தெளிவுபடுத்தப்பட்டன. பு/ செய்னப் மகளிர் ஆரம்பப் பாடசாலையின் மற்றுமொரு முன்னோடியும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய திரு. அப்பாஸ் அவர்கள் பாடசாலை தொடர்பான செய்திமடல் வெளியிடுவது பற்றிய ஆலோசனையை முன்வைத்தார். இதன் அடிப்படையில் கலாசாரக் குழுவிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேலும் இக்குழுக் கூட்டத்தில் பாடசாலையின் பாதையை சீரமைத்தல், சுற்றாடலை அழகுபடுத்தல், கற்பதற்குகந்த சூழலை ஏற்படுத்துதல், நிழல்தரும் மரங்களை நட்டுப் பராமரித்தல், பாடசாலையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அப்பொறுப்புக்கள் செயற்குழுக்களிடம் கையளிக்கப்பட்டன.

**Ashraf Memorial Park Lane, Poles Road, Puttalam. 61300, Sri Lanka.**

Office Desk :- +94 3272 10620 Telefax :- +94 3272 10620 Email:- zainabmgps@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களது ஆக்கங்கள்




எம்.எஸ்.மர்யம் ருக்ஷா
Year 3E



ஏ.ஆர்.எப்.எப் ரபாத் ஆராஹ்
Year 3E

என்.ஆர்.எப். நிஸ்மா
Year 3F



# கழிவறை வசதிகள்



பாடசாலை அமைத்த காலம் முதலாக நிரந்தர கழிப்பறைகள் காணப்படவில்லை. மாணவர்களும், ஆசிரியர்களும் பாத்திமா மகளிர் கல்லூரியின் கழிப்பறைகளையே பயன்படுத்தி வந்தார்கள். இதனால் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. இதனையடுத்து தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத ஒரு நலன் விரும்பி முன்வந்து இக்கழிப்பறைகளில் ஒன்றை அமைக்க உதவி வழங்கினார். அது ஆசிரியர்களின் பாவனைக்காக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான கழிப்பறைகள் மூன்றைக் கட்டும் பணி தொடர்கின்றது. இவ்வமைப்புக்கான சகல அம்சங்களிலும் பேருதவி புரிந்து வருபவர் பெற்றாரான *Najath Filling Station* உரிமையாளர் ஏ.எம். நிஜாம் அவர்களாகும்.



# றோனியோ இயந்திரம் அன்பளிப்பு

எமது பாடசாலையில் அச்சு இயந்திரமின்மை ஒரு பாரிய குறைபாடாகவே இருந்தது. ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள், பற்றுச்சீட்டுகள், கடிதங்கள் அச்சிடல் என பல்வேறு தேவைகளுக்காக பெருந்தொகைப் பணத்தை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இவ்வச்சு இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் நலன் விரும்பிகளும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார்கள். இறுதியாக 28.03.2008ல் எமது பாடசாலையின் ஒரு பெற்றாரும், நலன் விரும்பியுமான *Dry Sea Food* நிறுவன உரிமையாளர் திரு.கௌஸ் அவர்கள் எமது வேண்டுகோளை ஏற்று றோனியோ மெஷின் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். இவருக்கு இம்மை மறுமை பயன்கள் நிறைவாகக் கிடைக்க பிராத்திக்கின்றோம். இது கிடைத்த பின் அச்சுத் தேவைகள் நிறைவேறுவதுடன் பாடசாலையின் பணச் செலவும் குறைவடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சி்யுடன் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலையின் தேவைகள்...

**1. நிரந்தரக் கட்டிட வசதிகள் :**
எமது பாடசாலை தற்போது பு/ பாத்திமா மகளிர் கல்லூரிக்கு சொந்தமான கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றது. வகுப்பறைகள் போதிய அளவில் இல்லை. எனவே எமக்கான நிரந்தர கட்டிடத் தொகுதியின் தேவை உள்ளது.

**2. சிறுவர் பூங்கா :**
எமது பாடசாலை ஆரம்பப் பிரிவுப் பாடசாலை என்பதால் சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே சிறுவர் பூங்கா, சிறிய செல்லப் பிராணிகள் வளர்க்குமிடம், உடல் - உள விருத்திக்கான சிறு விளையாட்டு இடம் என்பன தேவையாக உள்ளன.

**3. கணினி, வானொலி :**
பாடசாலை நிர்வாக விடயங்கள் கணினி மயப்படுத்தப்பட வேண்டியுள்ளதாலும், மாணவர்களின் பரீட்சைத் தாள்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளதாலும் கணினி, பிரின்டர், த்ரீடீ ஸ்கேனர், புகைப்படக் கருவி போன்றவை தேவையாக உள்ளன. மேலும் மாணவர்களின் கற்றலுக்காக வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி போன்றவை தேவைப்படுகின்றன. இவ்வகையில் 'பல்லூடக அறை' (Multimedia Room) தேவையாக உள்ளது.

**4. சங்கீதக் கருவிகள்** : எமது பாடசாலை ஒரு ஆரம்பப் பாடசாலை என்பதால் ஆடல் - பாடல்கள் மூலம் கல்வியூட்ட வேண்டியுள்ளது. அது இன்றைய கல்வி முறையுமாகும். எனவே அதற்கு சங்கீதக் கருவிகள் தேவையாக உள்ளன. (சுருதிப் பெட்டி, றபான், பியானோ, தாளம் போன்றவை)

**5. விளையாட்டு உபகரணங்கள்** : ஆரம்பத் தரங்களிலே விளையாட்டு மூலமே கற்றல் இடம்பெறவேண்டியுள்ளதால் சகல விளையாட்டு உபகரணங்களும் தேவையாக உள்ளன.

**6. வாசிகசாலை** : மிக அவசரமாக அமைக்கப்பட வேண்டியது வாசிகசாலையாகும். வாசிக்கும் திறனை வளர்ப்பதன் மூலமாக ஆரம்பக் கல்வியில் பாரிய அபிவிருத்தியை அடையலாம்.

**பாடசாலையின் ஒரு வருடப் பூர்த்தியின்போது பாடசாலையின் பெயர் கூறும் ஒரு வகுப்பறைக் கட்டிடமாவது உதயமாக வேண்டும் என்பது எமது அவா என்பது குறிப்பிடத்தக்கது!**

மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

### இனிய இயற்கை

ஆகா! எவ்வளவு இதமாக இருக்கிறது! சுத்தமாக, நித்தமாக உள்ளது. இந்தச் சூழல் எவ்வளவு அமைதியாக இருக்கின்றது. இந்தச் சூழலில் இருக்க பல்லாயிரம் மக்கள் வருவார்களே. இதமான காற்று, இதமான சூழல்! அதிசயத்தையும் அற்புதங்களையும் கொண்டிருக்கும் இந்தச் சூழல். வீசும் தென்றலுடன் பட்சிகள் எவ்வளவு உல்லாசமாகப் பறந்து திரிகின்றன! இனிய இயற்கை... இனிய இயற்கை ...! ஆகா! சுத்தமான காற்று நித்தமும் வீசினால்... நித்தமும் பால் நிலவு காய்ந்தால்... சுத்தமும் சுகந்தமும் என்றும் நிலைக்கட்டும். சுத்தமான சூழலுக்காய் என்றும் பாடுபடுவோம். அதனை அடைவதற்காய் கடும் முயற்சிகள் செய்வோம். அனைவருக்கும் சுற்றுச் சூழல், சுத்தம் தொடர்பாக அறிவூட்டுவோம். சூழலை பாதுகாக்கும் பணியை வீட்டிலிருந்து தொடங்கி, பாடசாலை, பாதைகள், ஊர் என விரிவு படுத்துவோம். எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு ஏற்பட அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம்.

எம்.எஸ்.என். பாத்திமா அப்ரிதா - **5E**

மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

## நினைவுச் சுவடுகள்...

**பாடசாலையின் உதயம் 31.01.2008 வியாழக்கிழமை**

**திறப்புவிழாவில் பங்கேற்ற அதிதிகள் :**
வடமேல் மாகாண சபை முதலமைச்சர் அதுல விஜேசிங்க அவர்கள், கால்நடைகள் வள பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ், வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான ஆப்தீன் யஹ்யா, என்.டீ.எம். தாஹிர், கே. ராதாகிருஷ்ணன், புத்தளம் நகரபிதா எம்.என்.எம். நஸ்மி, நகரசபை உறுப்பினர் எம்.எஸ்.எம். ரபீக், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.டி. சொலமன், புத்தளம் வடக்கு கோட்டப் பணிப்பாளர் வீ. நிர்மலா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார்.

**முதல் அதிபர்** : திருமதி பெலஜியா அபுல்ஹுதா.
B.Com. Dip-in-Edu, (Merit) M. Ed

**பிரதி அதிபர்** : திருமதி ஏ.எஸ். சம்சாத் பேகம் -
(பயிற்றப்பட்டவர் - ஆரம்பக் கல்வி)

**பாடசாலை கீதத்தை யாத்தவர்** : எம்.எஸ். அப்பாஸ்

**பாடசாலைக் கொடி, இலட்சினையை உருவாக்கியவர் :**
என்.எம். பௌமி

**முதலில் பதியப்பட்ட மாணவர் தொகை : 1314**
அதில் முதல் மாணவி எம்.ஆர். பாத்திமா ராபிஆ

**புத்தளம் கல்வி எழுச்சியின் முதல் பிரசவமாகிய செய்னபின் ஆரம்ப வைபவ நிகழ்வுக்காக அயராது பாடுபட்டோர்** : எம்.எஸ். அப்பாஸ், எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார், இசட்.ஏ. சன்ஹிர், என்.எம். பௌமி, ஏ.எப்.எம்.ரஸீன், இசட்.எம். நமாஸ், ஏ.ஓ. ரிபாய், எம். ஆர்.எம். மஸ்ரூர், ஏ.எம். ஹபீல், எம்.எஸ்.எம். ரபீக்

**முதலாவது பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் :**
எப்.ஏ.ஹுதா, ஏ.எஸ். சம்சாத் பேகம், எஸ்.ஏ.எஸ். சியாதா, எம்.பீ எப். றொஸ்மின், பீ. ஜயந்தன், கே. சுமேந்திரன், ஏ.எஸ். சாஹிர், ஏ.ஆர். அதவியா, எம்.எம். பசால், எஸ். வாமதேவன், ஏ.எச்.எம். நளீம், ஏ.எச்.எம். முப்லிஹா, ஆர்.எம். சமீர், எம்.எஸ்.எம்.பைசல், பசீர், எம்.எஸ்.எம்.ரபீக், ஏ.ஏ.புவாத், கே.இப்திகார், ஹனிப்டீன், ஏ.எச்.ஹில்மியா, நஹாரியா **மற்றும்** எம்.எஸ்.அப்பாஸ், நமாஸ், ஆசிக், பசீஹா, திருமதி நூருல்லா, ஏ.என்.எம்.பௌமி, நிஹார், ரசீன், திருமதி நி.மதுல்லா, எஸ்.டிலானி, ஜே.மாஹிரா, திருமதி பாரூக், ஜே.ஜவ்சி, திருமதி நஸ்வி, மசூத், சர்மிலா, திருமதி சிபாயா, திருமதி கலாம், ரிப்கா ஹுதா ஆகியோர்.

**கோட்ட மட்ட தமிழ் தின போட்டியில் முதலாமிடம் (ஜூன்2008) :**
எஸ். சம்ரத் தீனா (எழுத்தாக்கம்)
றிஜ்வானுல் ஜென்னாஹ் (இசையும் அசைவும்)

**கோட்ட மட்ட இஸ்லாமிய தினப் போட்டியில் முதலாமிடம்** : ரிஸ்னா

**வருடாந்த கதைகூறல் போட்டி முடிவுகள் :**

**தரம் 1**
1. ஆர்.எம்.எப்.சாரா (1C)
2. எம்.ஆர். பாத்திமா ராபிஆ (1E)
3. எம்.ஐ. இம்தா தகி (1B)

**தரம் 2**
1. வி. பிரகன்யா (2B)
2. எம்.ஆர். சுலைஹா ரவுபா (2B)
3. ஆர். என்டன் தினேஷ் (2B)

**தரம் 3**
1. எஸ்.ஏ.பாத்திமா நுபா (3E)
2. ஏ.ஆர். ரப்அத் ஆரா (3F)
3. ஜே.எஸ். சாலிஹா சம்லா (3E)

**தரம் 4**
1. ஏ.ஆர். செய்னப் சல்சபீல் (4B)
2. ஏ.பீ. இஸ்ரதுர் ரிஸ்மா (4A)
3. இசட். பாத்திமா சஸ்ரா (4B)

**தரம் 5**
1. எம்.ஆர். பாத்திமா ரஹ்மா (5E)
2. எம்.ஏ.பாத்திமா அப்ரா (5E)
3. எம்.எஸ்.பாத்திமா சப்னம் (5A)

**ஆறுதல் பரிசு பெறுவோர்**
1. எம். அப்துல்லாஹ் (1D) 2. சீ ரேணு ஷர்மீ (1B) 3. எம்.எஸ். பாத்திமா சமீஹா (1D) 4. எம்.ஏ. ஆஷா (2D) 5. ஏ.கே.ரணா (2C) 6. எம்.எம். அஸ்ஹா (2C) 7. என்.ஆர்.எப். நிஸ்மா (3F) 8. எம்.ஆர்.எப். ருஹுசத் (3F)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ண மீன்கள்

புள்ளி உள்ள மீன்கள்
பார்க்க அழகு மீன்கள்
வண்ண வண்ண மீன்கள்
நல்ல நல்ல மீன்கள்

நீரில் மட்டும் வாழும்
நல்ல நல்ல மீன்கள்
என்னைக் கண்டால் ஓடும்
புள்ளி உள்ள மீன்கள்

மனிதருக்கு உணவாய்
தம்மைக் கொடுக்கும் மீன்கள்
பல பல வர்ணத்தில்
கவர்ச்சியளிக்கும் மீன்கள்

கடல், ஏரி, குளம் தனிலே
வாழும் அந்த மீன்கள்
சின்ன பெரிய மீன்கள்
பார்க்க அழகு மீன்கள்!

எம்.ஏ. பாத்திமா முபஷ்ஷிரா **5D**

## கல்வி விதைப்பாய் !

உனக்குள் கல்வி விதைப்பாய்
அதை இலட்சியமாய் எடுப்பாய்
அதற்காகவே இராப் பகலாய்
சிரமம் பாராது கற்பாய்

எல்லை தொடும்போது
தாய், தந்தை, பிறர்
கண்ணீர் துடைப்பாய்
நீ சிறந்து விளங்குவாய்!

பெற்றோர், ஆசிரியர் சொற்கேட்டு
நடப்பாய், இன்சொல் பேசுவாய்
கற்றதை மீட்டிப் பார்ப்பாய்
கவனமாய் வாசிப்பாய்

எல்லாப் பாடங்களிலும்
உரிய கவனம் எடுப்பாய்!
ஓய்வில் நன்றாய் விளையாடி
மீண்டும் பாடம் படிக்க
புத்துணர்ச்சி பெறுவாய்!

எம்.எம்.எப். சஸ்னா **5E**

## கிளி

வண்ண வண்ண கிளியே
அழகு வர்ண கிளியே
பஞ்ச வர்ணக் கிளியே
பார்க்க ஆசை கிளியே!

தேனும் பாலும் தருவேன்
அழகிய கூடும் தருவேன்
அழகாய் பொந்து அமைத்து
அமைதியாய் அங்கிருப்பாய்!

உன்னைப் பார்க்க நானும்
ஓடி ஓடி வருவேன்
அழகாய் தோட்டம் அமைத்து
அன்பாய் உன்னைக் காப்பேன்!

.ஏ.எப். முன்சிபா **5D**

## குயில்

கரிய குயிலே! உன் இனிய
குரல் கேட்டாலே மகிழ்ச்சி!
உன் நிறம் தான் கறுப்பு
உன் குரலோ இனிமை!

என்ன மாயம் செய்கிறாய்
உன் மதுரக் குரலில்?
யாவரும் ரசிப்பார்களே!

உன் உடலை வெறுப்போரும்
உன் குரல் இனிமையை
மறக்காது பருகுவர் அன்றோ

புத்தாண்டை வரவேற்க
கூ... கூ... என்னும்
அழகுக் குரல் கொண்டு
கூவுகிறாய் ஆசைக் குயிலே!

எம்.எஸ்.என். நஸ்ஹத் **5D**

## பழம்

பழமோ பழம்! இனிய பழம்!
வாய்க்கு ருசியான பழம்!
எல்லோரும் விரும்பும் பழம்
ஆசையான பழம்
அழகான பழம்

உயிர்ச்சத்து உள்ளதுவாம்!
உடலுக்கு சக்தி தருமாம்
நல்லதொரு பழமாம்
தின்ன தின்ன தெவிட்டாத
தேனூறும் பழம்!

மகிழ்ச்சி தரும் பழம்
அறிவூட்டும் பழம்
சிவப்பு நிறப் பழம்
அது திரள் பழம்
ஆம்! அது என்ன பழம்?
அதுதான் அப்பிள் பழம்!

எம்.என் நஸ்ஹத் சப்ரின் **5E**

## மயூரியின் கைவிரல்கள்

ஒரு ஊரில் ஒரு சிறுமி இருந்தாள். அவளது பெயர் மயூரி. அவளது வலது கையில் ஐந்து விரல்கள் இருந்தன. ஒரு நாள் அவ்வைந்து விரல்களுக்கிடையே ஒரு சிறிய சச்சரவு ஏற்பட்டது. அப்போது பெருவிரல் "நான் இல்லையெனில் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று மற்ற விரல்களிடம் கூறியது. அதற்கு ஆட்காட்டி விரல் "அனைவரும் என்னைக் கொண்டே எதனையும் காட்டுகின்றனர். அதனால் நானே பெரியவன்" என்றது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த நடுவிரல் "என்னோடு அனைவரும் ஒன்று சேர நின்று பாருங்கள். அனைவரிலும் நான்தான் பெரியவன். பெருமை எனக்கே. இது கூட புரியவில்லையா?" என்று ஏளனமாகக் கூறியது. இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மோதிர விரல் "விலை உயர்ந்த கற்கள் பதித்த தங்கம் போன்ற பெறுமதி மிக்க மோதிரங்களை என்னில் தான் அனைவரும் இடுகின்றனர். அந்த வகையில் நான்தான் பெரியவன்" என்று அதன் பங்குக்கு அதுவும் தன் பெருமையை அறிவித்தது. கடைசியாக சின்னி விரல் "அனைவரிலும் மெல்லியதாக அழகாக சிறிதாக நான் தான் இருக்கிறேன். எனவே உங்கள் அனைவரிலும் நான் சிறந்தவன்" என்றது.

இந்த சச்சரவைக் கேட்டுக் கொண்டிருந்த மயூரி "நீங்கள் அனைவரும் உயர்ந்தவர்களே! எப்போது என்றால் எல்லோரும் ஒன்றுபட்டு எனது வேலையை செய்வதற்கு ஒத்துழைத்தால் தான்" எனக்கூறி வாதத்தை முடித்து வைத்தாள்!

எம்.ஆர்.எப். ரஹ்மா **5E**

## நான் கண்ட வீதி விபத்து

அன்று ஒரு விடுமுறை நாள். நான் எனது நண்பியின் வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தேன். நண்பியின் வீட்டுக்கு எதிரிலுள்ள வீதியின் அருகில் இருக்கும் பாதசாரிகள் கடவையில் மஞ்சள் கோட்டை அடைந்து பாதையின் இரு புறமும் பார்த்து வாகனங்கள் இல்லாத சமயத்தில் வலது புறம் பார்த்து, இடது புறம் பார்த்து மீண்டும் வலது புறம் பார்த்து பாதையைக் கடந்தேன். அவ்வேளை எனது எதிர்ப் புறத்தில் வாடி வதங்கிய தோற்றத்தில் வயோதிபர் ஒருவர் தள்ளாடியபடி நடந்து வருவதை அவதானித்தேன்.

வீதியைக் கடந்து நண்பியின் வீட்டை நெருங்கும் போது பாரிய சத்தம் ஒன்று கேட்டது. நான் வேகமாக ஓடி வந்து சத்தம் கேட்ட இடத்தை அடைந்தேன். வீதிக்கு குறுக்காக லொறி ஒன்று நின்றுகொண்டிருந்தது. மக்கள் கூட்டமாக நின்றனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது அதிர்ச்சியாய் இருந்தது. நான் பாதையைக் கடக்கும்போது எதிரே வந்த முதியவர் அந்த லொறியில் மோதுண்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். சற்று நேரத்தில் அந்த இடத்துக்கு பொலிசார் வந்தனர். அவர்கள் அம்புலன்ஸ் ஒன்றை வரவழைத்தனர். எல்லோருமாக சேர்ந்து முதியவரைத் தூக்கி அம்புலன்ஸில் கிடத்தி அனுப்பி வைத்தனர். அந்த விபத்து என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும்.

எம்.ஐ. ஜஸாரா ஹஸ்மத் **5E**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸெய்னப் செய்தி மடல்

Let's Learn in the Name of Allah Who Taught by Pen

ஸெய்னப் முஸ்லிம் மகளிர் ஆரம்பப் பாடசாலை

## ஆசிரியர் பீடத்திலிருந்து...

## சிந்திக்கும் நேரம் வந்துவிட்டது!

பு/ செய்னப் மகளிர் ஆரம்பப் பாடசாலையிலிருந்து வெளியாகும் முதல் செய்தி மடலில் நாம் உங்களை சந்திப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம். இச்செய்தி மடலானது ஆறு மாதத்துக் கொரு தடவை பிறந்து உங்கள் மத்தியில் பயணிக்கவுள்ளது. இன்ஷா அல்லாஹ் மேலும் இச் செய்தி மடலானது பு/ செய்னப் முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை தொடர்பான செய்திகளைச் சுமந்துகொண்டு உலா வர இருக்கிறது. என்ற நற்செய்தியையும் உங்கள் முன்வைக்கிறோம்.

கல்வி வேறாகவும் சமூகம் வேறாகவும் இயங்கிய காலமொன்றிருந்தது. அன்று இரண்டுமே கலப்படமற்ற தனித்துறைகளாக இருவேறு பாதைகளில் பயணித்தன. ஆனால் இன்று அப்படியல்ல. கல்வியும் சமூகமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாத இரண்டறக் கலந்த துறைகளாக இயங்கி வருகின்றன. இன்றைய கல்வித் தேவையை சமூகம் உணர்ந்து வருகின்றமை இதன் மூலம் கண்கூடாகின்றது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

"பாடசாலைகள் மூடப்பட்டால் சிறைச்சாலைகள் திறக்கப்படும்" இவ்வகையில் நோக்கும்போது பாடசாலைகள் சமூகத்தின் கண்களாக விளங்குகின்றன. பாடசாலைகளின் இரு கண்களாக விளங்குபவர்கள் பெற்றோரும் ஆசிரியர்களும் என்றால் அது மிகையல்ல. இவ்விரு கண்களும் ஆரோக்கியமாக இயங்கினால்தான் நல்ல காட்சிகளைக் காண முடியும். ஒரு கண்ணை மற்றக் கண் குத்திக் குருடாக்கிக் கொண்டு நல்ல காட்சிகளை நிச்சயம் காண முடியாது. அவ்வாறான ஒரு பாடசாலை நோய்வாய்ப்பட்ட ஒன்றாகவே விளங்கும். எனவே, ஒரு பாடசாலை சிறந்த முறையில் இயங்குவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஓரணியில் கைகோர்த்து நிற்கவேண்டிய தேவை உள்ளது.

இன்று இங்கு நடப்பதென்ன? குறைகூறிவிட்டு தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு ஒதுங்கிவிடும் நிலை கலாசாரமாகி விட்டது. ஆசிரியர்கள் பெற்றோரையும் பெற்றோர் ஆசிரியரையும் மாறி மாறி குறைகூறிக் கொண்டே இருபதாம் நூற்றாண்டைக் கழித்துவிட்டோம். ஏனைய சமூகங்கள் கல்வித்துறையில் விழிப்புணர்வு பெற்று செயற்படும்போது இன்றும் நாம் ஒருவரையொருவர் குறைகூறிக்கொண்டு காலத்தைக் கழிப்பது அழகல்ல. அது எமது சமூகத்தை நாமே குழிதோண்டிப் புதைக்கும் செயலாகிவிடும். எனவே நாமும் விழித்தெழ வேண்டிய காலம் வந்துவிட்டது. குறைகூறுவதை விடுத்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் கைகோர்த்து நிற்கும் காலம் வந்து விட்டது.

கல்வித்துறை உடனடியான வருமானத்தைத் தராத பாரிய செலவு மிக்க ஒரு துறையாக விளங்குகிறது. இலங்கை அரசாங்கம் மறைமுகமாகவும் படிப்படியாகவும் கல்வித்துறையின் பாரத்தை சமூகத்தின் மீது சுமத்திக் கொண்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. தனியார் பாடசாலைகளுக்கு அனுமதி வழங்குகின்றமை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இலவசப் பாடசாலைகளில்கூட சில உட்கட்டமைப்பு வசதிகளில் அரசு தலையிடாது ஒதுங்கி வருகின்றது வெளிப்படையான உண்மையாகும்.

இப்பாடசாலை பிறந்து ஐந்து மாதங்களைத் தாண்டிய நிலையிலுள்ளது. இதன் உட்கட்டமைப்பு வசதிகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவது வருந்தத்தக்க விடயமாகும். பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காக பெற்றோர் கூட்டங்களுக்கு அழைப்புகள் விடுக்கப்படும்போது வருகைதரும் பெற்றோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது. சுமார் 1300 மாணவர்கள் கற்கின்ற பாடசாலையில் பெற்றோர் கூட்டத்துக்கு வரும் பெற்றோரின் எண்ணிக்கை ஐம்பது பேரைக் கூடத் தாண்டுவதில்லை. அவ்வாறு வருகின்ற பெற்றோரும் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து நேரடியாக கருத்துக் கூற முன்வருவதில்லை. வெளியே சென்று நடப்புக்கள் குறித்து பல்வேறு கோணங்களில் நின்று கேவலமான முறையில் விமர்சிக்கும் இழிவான நிலையே காணப்படுகிறது.

மரம் நடுகைப் பணி, முதலாம் வகுப்புக்கான சிரமதானப் பணி என இரண்டு அபிவிருத்திப் பணிகளை நாம் நிறைவு செய்து இருக்கிறோம். இவ்வபிவிருத்திப் பணிகளுக்கு வருகை தந்த பெற்றோர் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருந்தனர்! அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் சமூகப் பங்களிப்புக்கு இம்மை மறுமைப் பேறுகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்குரிய பெற்றோர்களே, நலன்விரும்பிகளே,
இன்னும் பல அபிவிருத்திப் பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அவ்வாறான பணிகளுக்காக உங்களது ஒத்துழைப்பை இச் 'செய்னப்' நல்லாள் கரம் நீட்டிக் கேட்கிறாள். ஐந்து மாதக் குழந்தையாகிய இவள் உங்களது பொற்கரங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு தான் தளிர்நடை போடவுள்ளாள். எனவே இன்னும் தயங்காமல் முன்வாருங்கள். உங்கள் கரங்களைத் தாருங்கள். நாமும் இறையருளால் சாதிப்போம்! நமது எதிர்கால சந்ததியினரின் சீர் கல்வியை உறுதிப்படுத்துவோம்!

### ஓரின உடை அறிமுகம்

கடந்த 24.03.2008 அன்று எமது பாடசாலை மாணவர்களைத் தனியாக இனங்காட்டக்கூடிய வகையில் ஓரின உடை வழங்கப்பட்டது. இவ் வகையில் 01-03 ம் வகுப்பு மாணவர்களுக்கு இளஞ்சிவப்பு நிற மேலாடையும் (OVER CORT) கழுத்தில் கறுப்பு 'போ'வும் அணிவிக்கப்பட்டது. 04 05ம் வகுப்பு மாணவர்களுக்கு, இம் மேலாடைக்கு புறம்பாக இளம் சிவப்பு நிற ஹிஜாப் ஆடையும் வழங்கப்பட்டது. இவ்வாடைகளுக்காகப் பெற்றோர்களிடமிருந்தே பணம் பெறப்பட்டது.

### வாசிப்பு அறை

மாணவப் பருவத்தில் வாசிப்பு மிக முக்கியமான ஒன்றாகும். அதிலும் சிறுவர்கள் தேடிக் கற்பதும் வாசிப்பதும் மிக முக்கியமான கற்றல் விடயமாகும். வாசிப்புத் தேவையை நிறைவேற்றக் கூடிய வசதிகள் இப் பாடசாலையில் காணப்படவில்லை. இவ் வாசிப்புத் தேவைக்காக, எமது பாடசாலையானது 23.03.2008 அன்று Room to Read என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டது. இம் முயற்சியில் எமது பிரதம போஷகரான எம்.எஸ்.அப்பாஸ் அவர்கள் அயராது முயற்சி செய்து வருகின்றார்கள். இந் நிறுவனத்தார் புத்தகங்களும், தளபாடங்களும் வழங்க முன்வந்துள்ளார்கள். நாம் இந்நூல்களை வைத்துப் பராமரிக்க பொருத்தமான ஒரு அறையை அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த முயற்சிக்கு பெற்றோர்களின் உதவியை எமது பாடசாலை வேண்டி நிற்கின்றது.

### தொடர்பாடல் வசதி

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் வசதி மிக முக்கிய ஒரு தேவையாகவுள்ளது. எமது பாடசாலையிலும் அத்தேவையின் அவசியம் உணரப்பட்டது. கடந்த 15.02.2008 அன்று கால்நடைகள் வள பிரதி அமைச்சர் திரு கே.ஏ. பாயிஸ் அவர்களின் உதவியாளர் எம். றசீன் அவர்கள் முன்வந்து ஒரு தொலைபேசியைப் பெற்றுத் தந்தார். அவருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் எமது பாடசாலையின் உள்ளகத் தொடர்பாடலுக்கான (Amplifier) கருவிகள் கிடைக்கப்பெற்றன. அதனை எமது பாடசாலையின் பெற்றோரும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான திரு. எம்.எச்.எம். பைசல் அவர்கள் பெற்றுத் தந்து உதவினார்கள். அவருக்கும் இந்த உபகரணங்களைப் பொருத்துவதற்கு உதவிய எஸ். வாமதேவன், விமலபாலன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பூங்காவுக்கான விளையாட்டு உபகரணம்

சிறுவர்களுக்கு விளையாட்டுடன் கூடிய கல்வியே இன்று சிபாரிசு செய்யப்பட்ட கல்வி முறையாகும். எனவே சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா மிக முக்கியமான தேவையாகும். ஆனால் எமது பாடசாலை, விளையாட்டுப் பூங்கா ஒன்றைக் கொண்டிருக்கவில்லை என்ற விடயம் வருந்தத்தக்கது. 13.02.2008ல் கல்விக் காரியாலயத்தினூடாக ZEE SOW என்ற விளையாட்டு உபகரணமொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனால் அதனை உரிய வகையில் பயன்படுத்துவதற்கான விளையாட்டுப் பூங்கா ஒன்று இல்லாமையால் அவ்வுபகரணம் வெறுமனே நிறுத்தப்பட்டுள்ளது. இவ்விளையாட்டுப் பூங்காவை அமைப்பதற்கு உதவுமாறு பெற்றோரினதும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியை வேண்டி நிற்கிறோம்.

## சிற்றுண்டிச்சாலை

எமது பாடசாலையின் இதர செலவினங்களுக்காக எவ்வித வருமான வசதிகளும் காணப்படவில்லை. எனவே எமது பாடசாலையின் செலவினங்களை ஈடுசெய்யும் நோக்கம் கருதி கடந்த 02.06.2008 அன்று ஒரு தற்காலிக சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டது. அது மற்றுமோர் பொருத்தமன இடத்திற்கு மாற்றப்படும் வரை தற்போதைய இடத்தில் இயங்கி வரும். இச்சிற்றுண்டிச் சாலையில் மாணவர்களின் சுகாதார நலன் பிரதானமாகப் பேணப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிராம எழுச்சி - சிரமதானம்

கிராம எழுச்சி சிரமதானப் பணித் தொடரில் எமது பாடசாலையையும் சிரமதானப் பணி மூலம் சீரமைக்கும் நடவடிக்கையொன்று கடந்த 11.04.2008 அன்று மேற்கொள்ள ஏற்பாடாகி இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. இது அமைச்சு மட்டத்திலான ஒரு செயற்திட்டமாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கிராம செயலகம், மாவட்ட செயலகம், சமுர்த்தி அமைப்பு, அரசு, அரச சார்பற்ற அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட இருக்கின்றன. பெற்றோர்களின் உடலுழைப்பும், பொருளாதார ரீதியிலான பங்களிப்பும் பெருமளவில் எதிர்பார்க்கப்படுகின்றன. பாரிய அளவில் முன்னெடுக்கப்படவுள்ள இச்செயற்றிட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றத் தயாராகுங்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாடசாலையை அபிவிருத்தி செய்வோம்!

## குடிநீர் வசதி

எமது பாடசாலை ஆரம்பித்த காலம் முதலாக இப்பாடசாலைக்கென நிரந்தர குடிநீர் வசதிகள் இருக்கவில்லை. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் பல சிரமங்களை அனுபவித்தார்கள். கடந்த 09.05.2008 அன்று பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஆசிரியை என். நிசாம்தீன், ஆசிரியர் ஏ.எஸ். ஸாஹிர், சகோதரர் எம்.ஐ. அப்துல் நசீர் ஆகியோர் முன்வந்து குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்களின் சேவையை நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றோம்.

### மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

**கல்வியின் முக்கியத்துவம்** செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். அது ஈடு இணையிலாச் செல்வம். இச்செல்வமாகிய கல்வி அழிவில்லாதது மட்டுமல்ல, நிலைத்து நிற்கக்கூடியது. இதனையே வள்ளுவர் 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிற செல்வங்கள் அழிந்து விடக்கூடியன. ஆனால் கல்விச் செல்வமோ வெள்ளம், நெருப்பு போன்றவற்றால் அழிவுறாததும், கள்வரால் கொள்ளையடிக்க முடியாததுமாகும். இது ஏனையோருக்கு கொடுக்க கூடுமே ஒழிய குறைவடையாது.

இந்த வகையில் கல்வி சிறப்புடையது. கல்வி கற்றவரும் சிறப்புடையவர். மன்னனுக்கு தன் தேசத்தில்தான் சிறப்பு. கற்றவருக்கு சென்ற இடத்திலெல்லாம் சிறப்பு. எனவே கல்விச் செல்வம் மற்றெல்லாச் செல்வங்களையும்விட உயர்ந்ததும் முக்கியமானதுமாகும்.

கல்வி இல்லாவிடில் பிற செல்வங்களால் பயனேதுமில்லை. பிற செல்வங்களைத் தேடவும் அவற்றை நன்கு பயன்படுத்தவும் கல்வியே உதவுகின்றது. சிறந்த கல்வியானது சமூகத்தில் மனிதன் நற்பிரஜையாக வாழ வழிகாட்டுகிறது. எனவே நாங்களும் இளமையிலேயே சிறந்த கல்விச் செல்வத்தை தேடிப் பெற்று சிறப்புடன் வாழ்வோம்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'

அ. ஷஹ்னாஸ் - 4C

மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

**சமாதானம்** இன்று எந்த ஒரு மூலையில் பார்த்தாலும் கொலை, கொள்ளை, சண்டை, சச்சரவுகளே!. இன்று நாம் ஒரு நாட்டை, ஒரு ஊரை, ஒரு பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், கேட்டால் பார்த்தால் இருப்பது கொலை, கொள்ளை, குண்டுத் தாக்குதல் போன்ற அனர்த்தங்களே ஒழிய ஒரு நல்ல விடயமும் வெளிவர மாட்டாது. இதற்கெல்லாம் மூல காரணம் என்ன தெரியுமா? மக்களிடம் ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற நற்பண்புகள் இல்லாமையே.

இந்த நற்பண்புகள் ஏற்படுவதற்கு பரஸ்பர ஒற்றுமை தேவை. இந்த பரஸ்பர ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற நற்பண்புகள் தேவை. இந்த சமாதானம் வளர வேண்டுமாயின் ஒவ்வொரு தனிமனிதனும் ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற நற்பண்புகளை வளர்த்து, குடும்பத்துக்கு எத்திவைத்து, குடும்பம் சமுதாயத்துக்கு எத்திவைத்து, இது இப்படியே பரவலடையும்போது முழு உலகமுமே சமாதானம் என்ற போர்வைக்குள் வந்துவிடும்.

ஒரு மனிதன் நமக்கு தீமை செய்துவிட்டால் நாம் அவனுக்குக் கொடுக்கும் தண்டனை 'இப்படி ஒரு உத்தமனுக்கு தீமை செய்துவிட்டோமே' என்று வெட்கப்படும் அளவுக்கு அவனை வெட்கத்துக்கு உள்ளாக்கிவிட வேண்டும். இதைத்தான் வள்ளுவர் கீழ்வருமாறு கூறியுள்ளார் :

'இன்னா செய்தாரை ஒறுத்தல் - அவர் நாண நன்னயம் செய்துவிடல்'

இதற்கொப்ப நாம் வாழ்ந்தால் நிச்சயம் சமாதானம் என்ற போர்வையை பலமாக்கிக் கொள்ள முடியும். இதனால் மாணவர்களாகிய நாமும் ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகளை வளர்த்து, மேற்கூறிய திருக்குறளுக்கேற்ப வாழ்வோம்.

நன்றி! ஜஸாகல்லாஹு ஹைறன்!

எம்.எஸ்.எப்.சம்ரத் தீனா - 4E

மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம் மாணவர் ஆக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் வகுப்புக்கான சிரமதானப் பணி



14.03.2008 அன்று எமது பாடசாலையின் முதலாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம் நடைபெற்றது. அதில் முதலாம் தர மாணவர்களின் சிறந்த கற்றலுக்கான சூழ்நிலை அவர்களின் வகுப்பறையில் காணப்படாமையினால் கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இறுதியாக வகுப்பறையின் பின்புறத்தை சிரமதான முறையில் துப்பரவு செய்தல், வகுப்பறையின் சுவர்களுக்கு, தளபாடங்களுக்கு மை பூசுதல், நீர்க்குழாய்களைத் திருத்துதல் போன்ற பணிகளை முதற்கட்டமாக நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டது. இப்பணிகளை முன்னின்று நிறைவு செய்வதற்காகவும், முதலாம் வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. இச் சிரமதான பணிக்காக முதலாம் வகுப்பு மாணவர்களிடம் இருந்து ஒருவருக்கு 300.00 அறவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மார்ச் மாதத்தில் 20,21,22,23 ஆகிய நான்கு தினங்களும் தொடர்ச்சியாக பாடசாலை விடுமுறை தினமாக இருப்பதால், இத் தினங்களில் முதலாம் வகுப்புக்கான சிரமதானப் பணியை நிறைவேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. 22.03.2008 சனிக்கிழமை அன்று பெற்றோர்கள் அனைவரும் இச் சிரமதானப் பணியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அன்று வருகை தந்து உதவிய பெற்றோர்களை நாம் நன்றியறியதலுடன் பாராட்டுகின்றோம். வகுப்பறைக்குப் பின் புறத்தில் காணப்பட்ட பற்றைக் காடுகளை அழித்து இடைஞ்சல் தந்து கொண்டிருந்த வேப்ப மரமொன்றையும் வெட்டி வீழ்த்தினார்கள். பாம்பு முட்டைகள் கூட அவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது! அவற்றை மேலே கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள படத்தில் காணலாம்.

**முதலாம் வகுப்பு பெற்றோர் செயற்குழு உறுப்பினர்கள்**

தலைவர் - திருமதி சம்ஸீர்
உபதலைவர் - எம். ஜலீல்
செயலாளர் - திரு ரில்வான்
உப செயலாளர் - திரு. எம்.எம். பஸால்
பொருளாளர் - திரு பைரூஸ்
செயற்குழு உறுப்பினர்கள் :
திரு. அப்பாஸ், திரு. லாபிர், திருமதி. அதவியா, திரு. இஹ்ஸான், திருமதி ஸியாரத், திரு. பாருக், திருமதி. ரிஹானா காமில், திருமதி ரஸ்வியா பஸீர், திரு. நுஜுப், திருமதி ரிஸானா அஸ்ஃபா, திரு. ஜலீல், திரு. எம்.எம் பஸால், திரு. பாயிஸ்

செய்தி மடலாக்கக் குழுவினர்
பிரதம ஆலோசகர் / போஷகர் : திரு அப்பாஸ் - திரும்தி எப்.ஏ.ஹுதா (அதிபர்) பிரதூ. ஆசிரியர் : திருமதி ஏ.எஸ். சம்சாத் பேகம்
இணை ஆசிரியர்கள் : திருமதி ஏ.ஆர். அதவியா, திருமதி எஸ்.ஜே.ஏ. ஜப்பார், புகைப்படப் பிடிப்பாளர் : திருமதி ஏ.ஆர். அதவியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை - மேலதிக வகுப்புகள்



22.02.2008 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் எமது பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர் கூட்டம் நடைபெற்றது. அதிபர் தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களும், நலன் விரும்பிகளும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். இதன் போது ஐந்தாம் வகுப்பு பெற்றோர்கள் அடங்கிய ஒரு செயற் குழு உருவாக்கப்பட்டது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி, ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு வாரத்தில் நான்கு நாடகள், மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை 3 மணித்தியாலங்கள் மேலதிக வகுப்பு நாடாத்தப்படுகின்றது, இம்மாலை நேர வகுப்புக்கள் 25.02.2008 அன்று ஆரம்பிக்கப்பட்டன. அதில் தமிழ்,கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்கள் நடைபெறுவதுடன், சிங்களம், ஆங்கிலப் பாடங்களை நடாத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு மாணவர் தலா 200.00 கொடுப்பனவாக வழங்கவேண்டும் என பெற்றோர் தீர்மானித்துள்ளனர். இந்த தீர்மானத்தின்படி நியமிக்கப்பட்ட ஐந்தாம் வகுப்பு பெற்றோர் குழுவினர் இப்பணத்தை வசூல் செய்து கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்கி வருகின்றனர். பெற்றோர்களின் அசிரத்தையின் காரணமாக, மாதம் ஒன்றுக்கான 200 ரூபாவை கிரமமாகப் பெற முடியாதுள்ளது. விளைவாக ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவும் தாமதமாகிறது. இது வருந்தத்தக்க ஒரு விடயமாகும். ஆசிரியர்கள் மிகுந்த வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தியாக மனப்பாங்குடன் இம்மேலதிகப் பணியை நிறைவேற்றுகின்றார்கள். பாசாலையின் அபிவிருத்தி ஆசிரியர்களின் கைகளில் மட்டுமல்ல பெற்றோர்களின் முயற்சியிலும்தான் தங்கியிருக்கின்றது என்பதை பெற்றோர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். மேலும் எதிர்வரும் காலங்களில் பல்வேறு கருத்தரங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் வகுப்புக்கான செயற்குழு உறுப்பினர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தலைவர் | - | ஏ.எம். ஜவாத் | செயலாளர் | - | எம்.டீ.எம். ஸியாத் |
| பிரதிச் செயலாளர் | - | திருமதி ஜுங்கிர் | பொருளாளர் | - | எம்.என்.எம். பஹ்ரி |
| உப பொருளாளர் | - | எம்.ஐ. ஜமீனா | குழு உறுப்பினர்கள் | - | திருமதி சல்மியா, |

திருமதி ஆமினா, திருமதி சித்தி அன்ஸியா, பவ்மினா, முப்லிஹா, எம்.எம் நவாஸ், ஜே.எம். மஸாஹிர், எஸ்.ஏ. நிஸார்

# நிழல் மரங்களை நடும் பணி



22.02.2008 அன்று நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் கூட்டத்தில் 'நிழல் மரங்களை நடும் சிரமாதானப் பணி' தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதன் படி 23.02.2008 அன்று சனிக்கிழமை இச் சிரமாதானப் பணியை முன்னெடுப்பது என்று உறுதி செய்யப்பட்டது. அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்கள் குறிப்பாக ஆண்கள் அனைவரும் இப்பணியில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இச்சிரமாதனப் பணிக்கு குறைந்தது 240 ஆண்களாவது தேவைப்படும் என்றும் நிழல் மரங்களை நடுவதற்காக சுமார் 100 குழிகளாவது தோண்டப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய 23.02.2008 அன்று அச் சிரமதானப் பணி நிகழ்வுற்றது. அன்று வருகை தந்த பெற்றோர்களின் எண்ணிக்கை 96 ஆகவே இருந்தது. குழி தோண்டும் பணியில் வருகை தந்த ஆண்கள் ஈடுபட அவர்களுக்கான குடிபான உபசரணைப் பணியில் பெண்கள் ஈடுபட்டார்கள். வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், வாகனங்கள், மற்றும் உரம் போன்றவற்றை வழங்கியவர்களையும் இதர உபகாரங்களை வழங்கிய உதவியாளர்களையும் நாம் மனமார பாராட்டுகின்றோம், நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களுக்கு இம்மை மறுமை பயன் கிடைக்க பிராத்திக்கின்றோம். இந் நிகழ்வின் போது அலுவலகப் பகுதியிலும், வாசல் பகுதியிலும் நிழல் மரங்கள் நடப்பட்டன. புங்கை மரம், வாகை மரம், பூவரசம் மரம் என்பன நடப்பட்டன.



GLOBELINK PRINTERS, Puttalam.
Tel. 032 7210543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org